**தேனி மாவட்டம்**
**மூத்த குடிமக்களுக்கான உதவி எண் அறிமுகப்படுத்துதல்,**
**சர்வதேச முதியோர் தினம் அனுசரித்தல்,**
**ஒருங்கிணைந்த சேவை மைய மாவட்ட செயற்குழுக் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்**
**மாவட்ட நீதிபதி / நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதியரசர் திரு. அ.முகம்மது ஜியாவுதீன் அவர்கள்**
**மாவட்ட சட்ட பணிகள் ஆணைக்குழு செயலர் திரு. கே.ராஜ்மோகன் அவர்கள்**
**ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது:-**

---

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் மூத்த குடிமக்களுக்கான உதவி எண் (14567) அறிமுகப்படுத்துதல், சர்வதேச முதியோர் தினம் அனுசரித்தல் மற்றும் ஒருங்கிணைந்த சேவை மைய மாவட்ட செயற்குழு கூட்டம் இன்று (08.10.2021) மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட நீதிபதி / நிரந்தர மக்கள் நீதிமன்ற நீதியரசர் திரு. அ.முகம்மது ஜியாவுதீன் அவர்கள், மாவட்ட சட்ட பணிகள் ஆணையக்குழு செயலர் திரு. கே.ராஜ்மோகன் அவர்கள், ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

ஒன்றிய அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்பு திட்டமான சகி-ஒருங்கிணைந்த சேவை மையம், தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் திட்டமாகும். குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தற்காலிகமாக 5 நாள் மட்டும் தங்கும் வசதி, அவசர மீட்பு உதவி, மருத்துவ உதவி, சட்ட உதவி, காவல் உதவி, உளவியல் ஆலோசனை மற்றும் ஆற்றுப்படுத்துதல் உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகள் ஓரிடத்தில் கிடைக்கும் வகையில், ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2018-ம் ஆண்டு முதல் ஒன்றிய அரசின் 100% நிதியுதவியுடன் நாடு முழுவதும் ஒரே சீரான குறியீடு 181 மகளிர் உதவி எண் மூலம் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 24 மணி நேர உடனடி மற்றும் அவசர கால அழைப்பை ஏற்பதை நோக்கமாக கொண்டு இத்திட்டம் செயல்படுகிறது. தேனி மாவட்டத்தில் சகி-ஒருங்கிணைந்த சேவை மையம் 03.10.2019 அன்று முதல் செயல்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த சேவை மையமானது தேனி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.

தமிழக அரசு மூத்தகுடிமக்களின் நலன் கருதி அவர்களை முறையாக பராமரிப்பதற்கு ஏதுவாக பல்வேறு விதிமுறைகளை விதித்து, அவர்களை நலம்பெற செய்துவருகிறது. மேலும், பெற்றோர் (ம) மூத்த குடிமக்கள் நலன் (ம) பராமரிப்பு சட்டம் 2007 (ம) விதிகள் 2009ன் கீழ் எவ்வித வருமானமற்ற பெற்றோர் கீழ்க்காணும் இனங்களில் தங்களின் முதிர் வயதில் தங்களின் இயல்பு வாழ்க்கையினை அதே நிலையில் தொடர்வதற்காக தங்களது வாரிசுகளிடமிருந்து பராமரிப்பு தொகை பெறுவதற்கு அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நம்பிக்கையான ஒரு தேசிய தொலைபேசி சேவையை உருவாக்குவதன் மூலம் மூத்த குடிமக்களின் வாழ்க்கையில் ஒரு நேர்மறையான மாற்றத்தை உருவாக்கி, இந்தியாவில் உள்ள மூத்த குடிமக்களின் கோரிக்கைகளை குறைதீர்க்கும் தளமாக செயல்படுத்தப்படுகிறது. அதன்படி, மூத்த குடிமக்களுக்கான கட்டணமில்லா உதவி எண் 14567 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதரவு மற்றும் வழிகாட்டுதல் வழங்கப்படுவதையும் நாட்டில் உள்ள ஒவ்வொரு மூத்த குடிமகனும் அறிந்து கொள்ளும் வகையில் கொண்டு சேர்த்தல். அரசாங்கத்தின் மூத்த குடிமக்களின் நலனுக்கான திட்டம் மற்றும் செயல்முறை திட்டங்கள் குறித்த தகவல்களை பரவச்செய்தல். கோரிக்கைகள் தொடர்பான அரசின் செயல் திட்டங்களை அமல்படுத்தி வழிகாட்டுதலுக்கான தளமாக வழங்குதல். மூத்த குடிமக்களின் கோரிக்கைகளை குறைதீர்க்கும் செயல்முறைகளை வழங்குதல். மூத்த குடிமக்களின் தேவைகளை புரிந்து கொள்ளுதல்.

மூத்த குடிமக்கள் மத்தியில் ஆர்வம் மற்றும் நம்பிக்கையை உருவாக்கி அவர்களது மூப்பை சந்தோசத்துடன் எதிர்கொள்ள உதவுதல். மூத்த குடிமக்களுக்கான தேசிய தொலைபேசி சேவை என்பது தகவல்கள், வழிகாட்டுதல்கள், மன நல ஆலோசானை தொடர்பான ஆதரவு மற்றும் கள அளவிலான ஆதரவு போன்றவற்றை கொள்கை மாறாமல் செயல்படுத்துதல், பராமரிப்பு, உணர்வுகளை புரிதல் மற்றும் ஊக்கப்படுத்துதலுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, மாவட்டத்தில் மூத்த குடிமக்களின் நலனை கருத்தில் கொண்டு துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றிட வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் சார் ஆட்சியர் செ.ஆ.ரிஷப், இ.ஆ.ப., உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி கௌசல்யா, மாவட்ட சமூக நல அலுவலர் (பொ) கோ.புஷ்பகலா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**